Registered as a News Paper        பக்கங்கள் 04        விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM        Peoples Daily        மக்கள் தினசரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆடி 32 | (16 - 08 - 1992) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 180

## எழுதுவினைஞர் பரீட்சை 21 க்குமுன் விண்ணப்பிக்குக

எழுதுனர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைக்கும் தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் சேவைக்கும் நடைபெற இருக்கும் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை யாழ். அரச அதிபர் மூலம் அனுப்புவோர் தயவு செய்து இம்மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் தனக்குக்கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கும்படி யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். இம்மாதம் 16ஆம் திகதி அல்லது 17ஆம் திகதிவரவிருக்கும் கப்பல் 23 அல்லது 24 ஆம் திகதி திரும்பிச் செல்லுமென எதிர்பார்க்கப் படுவதனால் அந்தக்கப்பலில். கிடைக்கப் பெறும் சகல விண்ணப்பங்களையும் அனுப்பி வைக்கப்பட நடவ (4ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகர்ப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் பொன்னாலை, மூளாய், சுழிபுரம் ஆகிய பகுதிகளை நோக்கி பரவலான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று நண்பகல் வேளையில்
(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் அடுத்த ராணுவ நடவடிக்கை

# சிசிலுடன் புதிய தளபதிகள் யோசனை

## எல்லைகளைப் பலப்படுத்தவும் திட்டம்


(கொழும்பு)

வடக்கில் மேற்கொள்ளவேண்டிய அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை குறித்து இராணுவத் தளபதிகளின் உயர் மட்டச் சந்திப்பொன்று இடம்பெற்றது. இச் சந்திப்பில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா வடக்கிற்குத் தளபதியாக புதிதாக நியமனம் பெற்ற மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா, கிழக்கிற்கு நியமனம் பெற்ற பிரிகேடியர் லக்கி அலுகம ஆகியோர் கலந்துகொண்டனர். இச் சந்திப்பின்போது அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைகள் குறித்து பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பு மணித்தியாலக்கணக்கில் இடம்பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வடக்கிற்கும், கிழக்கிற்கும் புதிய தளபதிகள் தெரிவு செய்யப்பட்டு உத்தியோக பூர்வமாக அவர்கள் பதவி ஏற்கும் முன்னரே அவசரஅவசரமாக இச்சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பில் வடக்கில் மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை குறித்து விரிவாகஆராயப்பட்டதாகதெரியவருகின்றபோதும் மேலதிக தகவல்கள் பெறமுடியவில்லை என கொழும்பிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கில பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை வடக்கு-கிழக்குப்பகுதியிலுள்ள எல்லைப் பகுதிகளை பலப்படுத்துவதற்குப் புதிய நடவடிக்கைகள் மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கும், தலைவர் பிரபாகரனுக்கும் ஆதரவு தெரிவித்து அண்மையில், 20 அமைப்புக்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்ட டாக்டர் ராமதாஸ், பண்டுருட்டி ராமச்சந்திரன், நெடுமாறன், திருநாவுக்கரசு ஆகியோரும் படத்தில் முன்னணியில் உள்ளனர். இதேவேளை இவ் ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டமை தெரிந்ததே

# படைத் தளபதிகளின் இழப்பால் அரசு ஆட்டம் கண்டுவிட்டது

## பி.பி. சி. விமர்சனம்

வடக்கில் இராணுவ உயர் அதிகாரிகள் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஆட்சி ஆட்டம் கண்டு விட்டதுஎன்று ராவய ஆசிரியர் ஐவன் கூறியுள்ளதாக பி. பி. சி. தெரிவிக்கிறது.

எதிர்க்கட்சிகள் எவ்வளவு முயற்சித்தாலும் அரசை எதிர்க்காத, பொலிசைக் கண்டால் ஓடும் சிங்கள மக்கள் அரசு உயர் அமைச்சர்கள்மீது கற்களை வீசியதோடு பொலிசையும் தாக்கியுள்ளார்கள். இது அரசுமீது மக்கள் கொண்டிருக்கும் அதிருப்தியையே காட்டுகிறது

வடபகுதியில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறி செலவினங்களை அதிகரித்து வாழ்க்கைச் செலவை உயர்த்தி, அன்றாடம் சிங்கள மக்கள் இறந்து மடிவதைப் பார்த்தே மக்கள் இவ்வாறு கிளர்த்தெழுந்தார்கள் என்று பி. பி. சி. மேலும் தெரிவித்தது.

இதே வேளை, சிங்கள இனத்தின் காவலர் என்று கூறிக் கொள்ளும் உயர் பிக்குகள் இக் கொலைகள் குறித்து மௌனம் சாதிப்பது ஏன்? சில பிக்குகள் கற்களை வீசினார்கள் சிலர் அரசாங்கத்துக்குத் தாளம் போடுகிறார்கள் இது ஏன்?

-இவ்வாறு ராவய ஆசிரியரை மேற்கோள்காட்டி பி.பி.சி. அறிவித்தது.

# கிழக்கில் மற்றுமோர் அதிரடி

# 6 பொலிஸ் பலி: 5 பேர் காயம்

## 4 பேரைக் காணவில்லையாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு 36ஆம் கட்டை பொலிஸ் நிலையத்திலிருந்து எல்லைப்புகுதிகளில் வீதித்தடைகளை அகற்றவந்த சிறிலங்கா பொலிசார் மீது நேற்று விடுதலைப்புலிகள்மின் ... மேற்கொண்டனர். இத்தாக்குதலில் 6 பொலிசார் கொல்லப்பட்டதுடன் ஐந்து பேர் படுகாயமடைந்தனர். நான்கு ... லங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி. பி. சி. அறிவித்தது. அவர்களிடமிருந்து ஆறு ரி - 56 ரக ... குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## எதிர்க் கட்சிகளின் போக்கு;

# 4 பேரைக் காணவில்லையாம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு 36ஆம் கட்டை பொலிஸ் நிலையத்திலிருந்து எல்லைப்புகுதிகளில் வீதித்தடைகளை அகற்றவந்த சிறிலங்கா பொலிசார் மீது நேற்று விடுதலைப்புலிகள்மின்வேக அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் 6 பொலிசார் கொல்லப்பட்டதுடன் ஐந்து பேர் படுகாயமடைந்தனர். நான்கு பேரைக் காணவில்லைஎன சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி. பி. சி. அறிவித்தது. அவர்களிடமிருந்து ஆறு ரி - 56 ரக துப்பாக்கிகள் உட்பட ராணுவப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன.

காலை 8-00 மணியளவில் இடம் பெற்ற இத்தாக்குதல் மூன்று நிமிடங்கள் மட்டுமே நடத்தப்பட்டது.

இதனையடுத்து இவாகளுக்கு உதவிக்கென பதுளைச் சந்தியிலிருந்துவந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## கைப்பற்றப்பட்டவை

| | |
|---|---|
| ★ ரி - 56 ரக துப்பாக்கி | - 06 |
| ★ நடுத்தர ரவைகள் | - 806 |
| ★ ரி - 56 மகசின் | - 24 |
| ★ கோல்சர் | - 06 |
| ★ சப்பாத்து | - 01 சோடி |
| ★ தொப்பி | - 03 |
| ★ பெல்ட் | - 02 |

# திருமலையில் ராணுவ சுற்றிவளைப்பு பல தமிழ் மக்கள் கைது

[திருக்கோணமலை]
திருக்கோணமலை பாலையூற்றுக்கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைப்பொன்றை நடத்தி 23 தமிழ் மக்களைக் கைதுசெய்திருந்தனர் இத் தமிழ் மக்கள் 23 பேரும் தொடர்ந்தும் சிறிலங்கா இராணுவத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் இவர்களில் நால்வர் பெண்கள்.

இதனிடையே திருக்கோணமலை நகரின் பல முக்கிய பகுதிகளிலும் சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த செவ்வாய்க் கிழமையன்று பெரும் எடுப்பிலான தேடுதல் நடவக்கைககளை மேற்கொண்டனர் சிறிலங்கா இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் பல தமிழர்கள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு அனைவரும் உட்துறைமுக வீதியிலுள்ள பொது மண்டபம் ஒன்றில் முகமூடி அணிந்தவர்கள் முன் நிறுத்தப்பட்டதாக தெரியவருகிறது

## எறிகணை வீச்சு குறித்து அரசிற்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரைநோக்கி நேற்று முன் தினம் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல் குறித்தும் இத் தாக்குதலால் அப்பாவி பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்தும் யாழ். அரசாங்க அதிபர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்.

நேற்றுக்காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க காரியாலயத்தினூடாக மேற்படி சம்பவம் குறித்த தகவல் ஜனாதிபதி பிரேமதாசவுக்கும், யாழ். இராணுவத் தளபதிக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த குழந்தை ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)
நேற்று முன்தினம் இரவு தீவகத்தில் இருந்து ஓட்டுமடப் பகுதியை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினரால் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களது எண்ணிக்கை இரண்டாக உயர்ந்துள்ளது.

மேற்படி தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்று வயதான ஆண் குழந்தை பத்திநாதர் கவாஸ்க்கர் மரணமடைந்திருக்கிறார். (க)

## வதந்தியை நம்பி குடும்ப பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)
கணவன் இறந்ததாகக்கூறப்பட்ட வதந்தியை நம்பிய மனைவி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று யாழ். ஓட்டுமடத்தில்நடைபெற்றது. நேற்றுமுன்தினமிரவு இப்பகுதி மீது நடத்தப்பட்ட எறிகணை தாக்குதலினால் காயமடைந்த இராசையா இராசகுலசிங்கம் (வயது 34) என்பவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது மரணமடைந்துவிட்டதாக கூறப்பட்ட பொய்யான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க் கட்சிகளின் போக்கு; பிரேமதாசா கண்டனம்

(கொழும்பு)
இறந்து போன படையினர் ஆத்ம சாந்தி பெற வேண்டுமெனப் பிரார்த்திக்க வேண்டிய வேளையில், குறிப்பிட்ட சிலர் தாம் வெற்றி பெற வேண்டுமெனக் கூச்சலிட்டனர். இதிலிருந்து குறிப்பிட்ட சிலரின் அரசியற் போக்கு எத்தகையது என்பதை விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறினார்.

ஆடை தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றைத் திறந்து வைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில், எதிர்க்கட்சியினர் பொறாமை கொண்டு அரசிற்கு எதிரான சக்திகளுக்கு ஊக்கம் தருவதாகக் குறிப்பிட்டார்.

இவ் வைபவத்தில் பேசிய மேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஒஸி அபயகுணசேகரா தோட்டங்களின் சொத்துரிமையை மக்களுக்கு வழங்கிய ஹெக்டர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர் விடுதலை

(கொழும்பு)
இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் இருபது பேரும் விடுவிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர்களது படகுகள் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓடும் சிங்கள மக்கள் அரசு உயர் அமைச்சர்கள்மீது கற்களை வீசியதோடு பொலிசையும் தாக்கியுள்ளார்கள். இது ...டம் சிங்கள மக்கள் இறந்து மடிவதைப் பார்த்தே மக்கள் இவ்வாறு கிளர்த்தெழுந்தார்கள் என்று பீ. பி. சி. மேலும் தெரிவித்தது.

ஏன்?

-இவ்வாறு ராவய ஆசிரியரை மேற்கோள்காட்டி பி.பி.சி. அறிவித்தது.

## இன்று சிங்கள மக்கள் உண்மையை உணர்ந்தனர்

பொரளை கனத்தையில் தான் 1983ஆம் ஆண்டு இனக் கலவரம் ஆரம்பமாகியது. அன்று சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்குஎதிராகவன் செயல்களில் ஈடுபட்டனர். ஆனால் இன்று அரசை இலக்கு வைத்து அதே கனத்தையில் அரசுக்கெதிரான தாக்குதல்கள் இடம் பெற்றன. இச் சம்பவம் சிங்கள மக்கள் உண்மை நிலையை உணர்ந்து விட்டார்கள் என்பதையே காட்டுகிறது

இவ்வாறு பி. பி. சி தெரிவித்தது.

## டென்சிலின் இறுதிச்சடங்கு:

# அவசர கோலத்தில் நடத்தியதற்கு அரசியல் உள்நோக்கம் உண்டு

(கொழும்பு)
காலஞ்சென்ற லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ 1982 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் ஜனாதிபதியாகப் போட்டியிட்ட ஹெக்டர் கொப்பேகடுவவின் நெருங்கிய உறவினர். மேலும் காலஞ்சென்ற கொப்பேகடுவ சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் உறவினரும் கூட. இந்த மரணச்சடங்கை விமர்சையாகச் செய்வதன்மூலம் எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சி பயனடையலாம் என்று கருதிஅரசு மரணச் சடங்கை அவசர கோலத்தில் நடத்தியது.

லெப். ஜெனரல் கொப்பேகடுவவின் மரணச்சடங்கை விமர்சையாக அரசு செய்யாமல் தட்டிக்கழித்ததால் ஆத்திரமடைந்தமக்கள் வன்செயல்களில்இறங்கி அமைச்சர்களை தாக்கியதாகத் தெரியவருகின்றது என்று பி.பி.சி அறிவித்தது.

இவர்களுக்கு இறுதி அஞ்சலி செய்யும் நிகழ்ச்சிகளில் நாட்டின் ஜனாதிபதி கலந்துகொள்வது வழக்கம். அப்படியிருந்தும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்வதை ஏன் தவிர்த்துக்கொண்டார் என்று சிங்கள மக்கள் மத்தியில் பேசிக் கொள்ளப்படுகின்றது.

கொப்பேகடுவவின் மரணச் சடங்கில் குழப்பம் ஏற்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நீதி வழங்காவிட்டால் நீதி மன்றம் செல்வர்

(யாழ்ப்பாணம்)
திருக்கோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு எனத் தெரிவு செய்யப்பட்டு மூன்று வருட கட்டாய சேவைக்கென வெளிமாவட்டத்திற்கு அனுப்பப்பட்டசகலதமிழ் ஆசிரியர்களையும் உடனடியாக அவர்களின் மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யும் பொறுப்பிலிருந்து கல்விச்சேவைச் சபை தவறிவிட்டது.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கல்விச்சேவைச் சபையின் தலைவருக்குச் சுட்டிக்காட்டி உடன் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுள்ளார்.

கல்விச் சேவைசபைத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் உடன் நடவடிக்கை எடுக்காது விட்டால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அடிப்படை உரிமை மீறல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் நிலை உருவாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பட்டதாரி எழுதுவினைஞர் புதிய சம்பளத் திட்டம் !

பொது நிர்வாகத் துறையில் எழுதுவினைஞர்களாகக் கடமையாற்றும் பட்டதாரிகளுக்கு புதிய சம்பளத் திட்டமும், பதவி உயர்வுத் திட்டமும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாய் அரச செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும் மாதாந்தம் 2000 தொடக்கம் 3000 ரூபா வரையிலான ஊதியம் பெறுவோருக்கு மறுக்கப்பட்டு வந்த 300 ரூபா படியையும் வழங்குவது பற்றி கவனத்திற்கெடுக்கப்படவுள்ளதாயும் தெரியவருகிறது.

பொது எழுதுவினைஞர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**கேட்டினைத் தவிர்க்க காட்டினை வளர்ப்போம்**

## வரி விளம்பரம்

### ஸ்ரீ கருமாரி சோதிட நிலையம்

உங்களின், உங்கள் குழந்தைகளின் நிகழ்கால, எதிர்கால பலன்களை அறிய நாடுங்கள். அன்னை ஆதிசக்தி ஸ்ரீதேவி கருமாரியின் அருள் பெற்ற சோதிடர் அம்பிகை தாஸ் அவர்களை. துன்பளைமேற்கு (ஸ்ரீ சாரதா தேவி ஆச்சிரமத்திற்கு அருகில், தபால் பெட்டிச் சந்தி), பருத்தித்துறை. (2895)

### புதிய மீரா நாவல்

1992 இல் வெளிவந்தவை ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' (வாமதேவன்) ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' (சிதம்பர திருச்செந்திநாதன்) ''விண்ணில் அல்ல விடிவெள்ளி'' (தாமரைச் செல்வி) யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (3003)

### மனைப்பொருளியல் 1 A/L

1993-94 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள A/L பரீட்சைக்கான மனைப்பொருளியல் I வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன தொடர்பு முகவரி:-இல. 88, பலாலி-தெரு, இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம். (3014)

### பெற்றுக்கொள்ளவும்

12-08-1992 புதன்கிழமை மாலை 6.00 மணியளவில் கொக்குவில் கோவில் வீதியில் தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டு உடுவில் தெற்கு சித்தி விநாயக ஆலய நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெறவும். (30,29)

## ஒத்திவைப்பு

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பது தொடர்பாக அரசு கிழக்கு மாகாணத்தில் நடத்தவிருந்த சர்வசன வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மக்கள் கருத்தறியும் தேர்தல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

### நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி லியோ கழகத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவராக எஸ். மகேஸ்வரனும் உப. தலைவராக கே. உதயனும், செயலாளராக எஸ் மனோ

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி

சேயாக மடியில் 05 — 04 — 1972



வீரனாக மண்ணில் 03 — 07 — 1992

### லெப்டினன்ட் ராஜேஸ்

( கந்தையா சிறிசுதாகர் )

ஈழத்தமிழினத்தின் இன்னல் நீ கண்டு
வீரத்தமிழ்ப்படையில் விரைந்திணைந்தாய்
போரில் குதித்துப் பெற்ற வெற்றிகள் போதாதென்று
ஊரைக்காக்க உத்தமனே உந்தன் உயிரீந்தாய்

மணலாறு மட்டுமல்ல மட்டற்ற போர்க்களத்தில்
வரலாறு நீ படைத்து வீரனானாய் - சகடை
குண்டுகள் பொழியவந்து மண்டலாய் வான்வெளியில்
துண்டென சிதறியகாட்சி நீ அறியாய் - இதைக்
கண்டு நீ மகிழமுன்னே மண்டலாய் போர்க்களத்தில்
மடியலானாய் மாவீரனானாய்!

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரர்,
உறவினர்.

ஆழியவளை,
தாளையடி.

( 3006 )

---

6-ம் ஆண்டில் அலைமோதும்

## நினைவலைகள்

தாய் மகிழ 1972 — 04 — 25



தாய் மண் வாழ 1987 — 08 — 11

### வீரவேங்கை கருணா

[செல்லத்துரை - தயாகரன்]

திதி: 16- 08. 1992

தங்கத்தாய் நாடுமீட்கத் தயாகரா! தாகங்கொண்டாய்:
பொங்கித்தான் உறுதி பூண்டாய்! புலிப்படைக் கருணா!
நீயும்
சங்கத்தானையிலே நேர்ந்த விபத்திலே தியாகியானாய்!
மங்கித்தான் ஆண்டாறாச்சு! மனதிலஞ்சலிசெய்கின்றோம்!

11- 08- 1987 அன்று சாவகச்சேரி, சங்கத்தானையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் இவருடன் வீரச்சாவடைந்த

---

## தள்ளாடியில் விமானத்தளம் ஒரு பாதை வேலை பூர்த்தி

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தின் பிரதான இராணுவ முகாமாகிய தள்ளாடி இராணுவ முகாமில் நிர்மாணிக்கப்பட்டு வரும் விமான ஓடு பாதையின் நிர்மாண வேலைகள் முடிவடையும் தறுவாயில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

இரத்மலானைக்கும், மற்றும் முக்கிய பாதுகாப்புத் தளங்களுக்கும் தள்ளாடிக்கும் இடையேயான விமானப் போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும்,

இவ்வாறான விமானசேவை ஆரம்பமாகியதும் தற்போது கற்பிட்டியூடாக மன்னாருக்குப் போக்குவரத்து செய்யும் படையினர் முற்று முழுதாக விமான மார்க்கமாக பிரயாணத்தை மேற்கொள்வார்கள் என்றும், தெரிவிக்கப்படுகிறது.

## குடும்பஸ்தர் வெட்டிக்கொலை கொலையாளி சரண்

(கரவெட்டி)

கம்பர்மலை பன்குரன்கொலனியைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகலிங்கம் என்னும் குடும்பஸ்தர் கடந்த வியாழன் இரவு வெட்டிக் கொல்லப்பட்டார். இவரை வெட்டிய கொலையாளியான பெரியதம்பி என்றழைக்கப்படும் நபர் தானாகவே பருத்தித்துறை காவல் துறைப் பணிமனைக்குள் சென்று தான் நாகலிங்கத்தை வெட்டி காயப்படுத்திவிட்டதைத் தெரிவித்து சரணடைந்தார்.

நடந்த தகராற்றில் மேற்படி கொலையாளியும் காயமடைந்ததால் மந்திகைஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்கு காவல்மத்தியில் அனுமதிக்கப்பட்டார். இதற்கிடையில் வெட்டுண்ட நாகலிங்கம் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்கையில் மரணமானார். விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. (06)

இராணுவத்தினரின் மறைவிற்கு

## துக்கம் கொண்டாடுவது நடைமுறையிலில்லை

(கொழும்பு)

இராணுவத்தினரின் மறைவுக்கு தேசிய துக்கதினம் கொண்டாடும் நடைமுறையிலில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க வாராந்த செய்தியாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் இராணுவத்தினரின் இறுதிச் சடங்குகளின் போது கனத்தை மயானத்தில் கலவரங்கள் இடம் பெற்றமைக்கு அரசியல் பின்னணியே காரணம் எனவும் இக்கலவரங்கள் தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை பார்த்து ஆரவாரம் செய்தது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினர்.

---

## ஓராண்டு நினைவஞ்சலி

வீரஜனனம :
24 - 02 - 1974

வீரச்சாவு :
29 - 07 - 1991

திதி :
16 08 -- 1992



---

## தரம் 3 அதிபர்களுக்கு பதவிஉயர்வு வழங்கபணிப்பு

(கொழும்பு)

தரம் மூன்று அதிபர் சேவையில் 1973ஆம் ஆண்டு பணியாற்றிய அனைவருக்கும் கல்வி, நிர்வாக சேவையில் மூன்றாம் வகுப்பிற்குப் பதவி உயர்வு வழங்குமாறு கல்வி அமைச்சு மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளது.

இவர்களுக்கு 21-4-82 தொடக்கம் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு ஐந்திலும், 1-1-85 தொடக்கம் கல்வி நிர்வாக சேவை மூன்றாம் வகுப்பிலும் பதவி உயர்வு வழங்கப்படும்.

27-9-89க்கு முன் ஓய்வூதியம் பெற்ற தரம் மூன்று அதிபர்களுக்கு இப்பதவி உயர்வு வழங்கப்பட மாட்டாது என்றும் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி தரம் மூன்று அதிபர்களில் 1-9-88க்குப்பின் கல்வி நிர்வாக சேவைக்கு பதவி உயர்த்தப்பட்டவர்களின் நியமன திகதியும் 21-4-82 ஆகவே கொள்ளப்படும் என்றும் சுற்றறிக்கை குறிப்பிடுகின்றது.

## புற்றுநோய் தடுப்பு சங்கம் மீண்டும் இயங்கும்

வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கம் இரண்டு ஆண்டு இடைவெளியின் பின் யாழ் நகரில் மீண்டும் இயங்க உள்ளது

யாழ். நகர் பிரதான வீதியில் உள்ள பிலிப் நர்ஸிங் கோம் கட்டடத்தில் அடுத்த மாதம் முதற் திகதியிலிருந்து இச் சங்கம் இயங்கும்.


சங்கத்தின் புதிய தலைவராக அண்மையில் தெரிவுசெய்யப்பட்ட யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

முன்னாள் தெல்லிப்பழை வறுத்தலை விளான் பகுதியில் இயங்கிய மேற்படி சங்கத்தின் நடவடிக்கைகள் 1990 ஜூனில் தொடங்கிய இராணுவ நடவடிக்கைகளை அடுத்து ஸ்தம்பித்துப்போனது குறிப்பிடத்தக்கது.

புதிய இடத்தில் சங்கம் இயங்கத் தொடங்கியவுடன் புற்று நோயை ஆரம்ப நிலையில் இனங்காணும் நோய் ஆய்வு நிலையமும், புற்றுநோயாளர் விடுதியும் அங்கு ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (42)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி அமிர்தவல்லி நாகராஜா (துரை)

மண்ணுலகில் 1-7-1918 — விண்ணுலகில் 17-7-1992

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மீதும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தெம்மைக் காதலித்து உச்சிமோந்து
முட்டச் சிறகிலிட்டுக் காப்பாற்றிய எம் தாயைப்
பிரிந்த முப்பத்தோராம் நாளாம் இன்று.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம்
நொந்து பெற்றுப் பையல் என்ற போதே
பரிந்து எடுத்து செய்ய - இருகைறத்திலேந்தி
கனக முலைத் தந்தாளை எப்பிறப்பிற் காண்போம் இனி

சாவகச்சேரி லியோ கழகத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் இடம் பெற்றது. இதில் தலைவராக எஸ். மகேஸ்வரனும் உப. தலைவராக கே. உதயனும், செயலாளராக எஸ் மனோகரனும், பொருளாளராக கே. சந்திரகுலசிங்கமும் ஏக மனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாகசபை உறுப்பினர்களாக கே குணசீலன், ரி. பிரதீபன், எஸ். நரேந்திரன், ஆர். பிரகலாதன், என். சுகந்தன் ஆகியோரும் தெரிவாகினர். (35)

## உற்சவம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மஹோற்சவம் (29-08-92) சனிக்கிழமை காலை 11 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது தொடர்ந்து பன்னிரண்டு நாள் உற்சவம் நடைபெற உள்ளது.

08-09-92 செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் 09-09-92 புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

## இன்று

நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கின் இன்றைய நிகழ்ச்சியில் நவமணி பத்மநாதன் பாட உள்ளார். இவருக்கு பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் பாக்கிய லக்சுமி நடராஜாவும் மிருதங்கம் பி. சின்னராசா அவர்களும் பங்குபேற்க உள்ளனர்.

★ ★ ★

வலி வடக்கில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடப்பெயர்ந்த மக்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று காலை 10 00 மணிக்கு இணுவில் அமெரிக்க மிஷன் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் இடம் பெயர்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட உள்ளதால் வலி - வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த அனைவரையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்டுகின்றனர்.

---

தங்கத்தாய் நாடுமீட்கத் தயாகரா! தாகங்கொண்டாய்:
பொங்கித்தான் உறுதி பூண்டாய்! புலிப்படைக் கருணா!
நீயும்
சங்கத்தானையிலே நேர்ந்த விபத்திலே தியாகியானாய்!
மங்கித்தான் ஆண்டாறாச்சு! மனதிலஞ்சலிசெய்கின்றோம்!

11- 08- 1987 அன்று சாவகச்சேரி, சங்கத்தானையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய வீரவேங்கைகளுக்கும் எமது அஞ்சலியைச் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்றைய தினம் சகபோராளிகளையும், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்!

நாகர் கோவில் றோட், எழுதுமட்டுவாழ்
தாய், தந்தை
சகோதர, சகோதரிகள்
உற்றார், உறவினர்
(சி 4893)

---

# 45-ம் நாள் நினைவஞ்சலி



## 2-ம் லெப். கரன்

(செல்வராஜா மருமகுமார்)

வீரப்பிறப்பு 18-07-1976
வீரச்சாவு 03-07-1992

உன்சிரிப்பாலும் பண்பாலும் பேச்சாலும்
வீரமான நடையாலும்
எம் நெஞ்சங்களில் உன் நினைவலைகள்
நிஜமாய் நிற்கிறதே குமாரா!
எங்கள் மண்ணில் எதிரியின் கால்பட
நெஞ்சு பொறுக்குமா என்று
பள்ளிப்படிப்பை பாதியில் விட்டு
வேங்கைப் படையில் சேர்ந்தவனே!
கட்டைக்காட்டில் களம் கண்டவனே!
உந்தன் இலட்சியம் நிச்சயம் மலர்ந்துவிடும்
வாழ்க தமிழ்! வளர்க தமிழீழம்!!

ஸ்ரீபரமேஸ்வரி சனசமூக நிலையத்தின்
நிர்வாகிகள், நண்பர்கள்
நீர்வேலி தெற்கு,
(3026)

---

திதி :
16 08 -- 1992



## வீரவேங்கை இராஜன்

(செல்வன் குமாரசாமி குணராசா)

ஈழத்தை மீட்பதற்காய் எம்மினிய சிறுவர்கள்
வேழத்தைக் கூட விழுங்கிடுவர் -களத்தில்
அசகாய சூரராய் ஆராய்ந்து செயல்பட்டால்
பிசகாது பின்னுமோர் கால்

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்-

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரங்கள்,
உறவினர்கள்.
(3027)

---

# 1-ம்ஆண்டு நினைவலைகள்

ஏழாலை நகரில் ஜனனம்;
22
|
06
|
19,6



ஆனையிறவில் வீரச் சாவு:
29
|
07
|
1991

## 2-ம் லெப்டினன்ட் செனித்

[குமாரசாமி திருவேரகன் (திரு)]

பால் மணம் மாறாப் பாலன் என
நாம் இருந்தோம் - நீயோ
ஈழக் கனவுகளை இதயத்தில் சுமந்து
இனிய தமிழ் காக்கச் சென்ற செனித்தே
ஆனையிறவு மண்ணில் வீரத்தை
உலகறிய வைத்தவர்களில் ஒருவனானாய்
நீ வீழ்ந்த இடத்தில் விடியல் பூக்கும்
சுதந்திர தமிழீழம் - நிச்சயம் நாளை மலரும்

ஆனையிறவில் வீரச்சாவடைந்த ஏனைய வேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்.

உனது பிரிவால் துயருறும்
ஏழாலை வடக்கு. தந்தை, உற்றார், உறவினர்கள்.
(3025)

---

பிரிந்த முப்பத்தோராம் நாளாம் இன்று.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம்
நொந்து பெற்றுப் பையல் என்ற போதே
பரிந்து எடுத்து செய்ய - இருகைறத்திலேந்தி
கனக முலைத் தந்தாளை எப்பிறப்பிற் காண்போம் இனி

★ 17-7-92-ல் எமது இல்லத்தில் நடைபெற்ற எமது தாயாரின் இறுதிக்கிரியையில் நேரில் கலந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மலர் வளையங்கள் சாத்தியும் எங்கள் துன்பத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் சிறப்பாக யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்கும், ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கும், யாழ் / வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் கிளி/ பளை மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களுக்கும் குறிப்பாக எமது தாயார் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்த போது உதவிகள் புரிந்த வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

கல்வளை
சண்டிலிப்பாய்.

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
(3024)

---

# நினைவு கூருகின்றோம்...

## 1992 - 08 - 16

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1985 ஆம் ஆண்டு வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் சிறிலங்கா காவல்துறையினர் மற்றும் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு முள்ளிப்பள்ளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**ராஜன்**

யாழ் நகரிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட கல்வியங்காட்டைச் சேர்ந்த தமிழ் இளைஞன் -மற்றும் நிலஅளவையாளரான தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4894]

நல்லூர் கிளை நூலகம் மாநகர சபை மன்றம் யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

வேர் வெட்டப்பட்ட பின்பு இலைகளுக்கு நீர் ஊற்றுவதால் என்ன பயன்?
— ஜீன் ஜேக் ரூஸ்ஸோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-08-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# எதற்கு விசாரணை?

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்டம் மயிலந்தனையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்மக்களின் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது. படுகொலை செய்யப்பட்டவர்கள் தமிழர்கள் ஆதலினால் வழக்கம்போல் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலோ, அன்றிப் பத்திரிகையிலோ பரபரப்பு எதுவுமில்லை. சம்பந்தப்பட்ட இடத்திற்கு அமைச்சரும் செல்லவில்லை. நிவாரணமும் வழங்கப்படவில்லை. பொலிஸாரும் 24 மணித்தியாலங்களுக்குப் பின்னரே சென்றடைந்துள்ளனர்.

தமிழர் படுகொலை செய்யப்படுவது அன்றாடக் காரியமாகிவிட்ட வேளையிலும், இந்த மயிலந்தனைப் படுகொலை மேலும் சில விடயங்களை விளங்க வைக்கின்றது. அண்மைக் காலத்தில், சர்வதேச ரீதியாக எழுந்துள்ள நெருக்குதல்கள் காரணமாக சிறிலங்கா அரசாங்கம் ஓரிரு படுகொலைகள்பற்றி விசாரணைகளுக்கு உத்தரவிட்டது. இவ்வாறு உத்தரவிடப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளில் கொக்கட்டிச்சோலைப் படுகொலையும் ஒன்று. இப்படுகொலையின் விசாரணை குறித்து பலமான அபிப்பிராய பேதங்களைத் தமிழ்மக்கள் கொண்டிருந்தபோதும், இப்படுகொலைக்கு இராணுவமே பொறுப்பு என்பது ஓரளவேனும் விசாரணை மூலம் வெளிவந்தது. இம்முடிவின்பிரகாரம், தவிர்க்க முடியாத நிலையில் இராணுவத்தினர்மீது விசாரணை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் அரசிற்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தான் ஓர் அதிகாரியும், 17 இராணுவத்தினரும் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ளதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டது. ஆனால், அன்றைய தினமே மயிலந்தனையில், தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவ்வாறானால், சிறிலங்கா நீதிமன்றங்களோ, அன்றி இராணுவ நீதிமன்றங்களோ தம்மை எதுவும் செய்துவிட முடியாது என்ற நம்பிக்கை இராணுவத்தரப்பில் உள்ளதே காரணமாகும். ஆகையினால், எவரின் வற்புறுத்தலுக்கோ அன்றி கட்டளைகளுக்கோ இராணுவத்தினர் ஒருபோதும் சம்மதிக்கப்போவதில்லை என்பது இதன் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது.

# காஷ்மீருனுள் பாக். உளவுப்படையினர்; இந்தியா கடும் ஆட்சேபம்

இந்திய கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு-காஷ்மீர் பகுதிக்குள் ஆயுதம் தரித்த பாகிஸ்தானியரின் ஊடுருவல் அதிகரித்துள்ளதால் இவ் ஊடுருவல் நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு இந்தியா, பாகிஸ்தானை எச்சரித்துள்ளது.

இந்நிலைமை தொடர்பாக இந்திய பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில் இப்பகுதியில் நிகழும் பதற்றத்தை குறைப்பதற்காக செயலாளர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ள இத்தருணத்தில் இப்படியான சம்பவங்கள் நடைபெறுவது துரதிஷ்டவசமானது எனத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் லாகூரைச் சேர்ந்த இரு நபர்கள் ஜம்முவின் விஜயபூர் நகரில் ''சுப்பர்ஃபாஸ்ட்'' ரயிலை குண்டு வைத்து தகர்ப்பதற்கு திட்டம் தீட்டியிருந்த வேளை ரயில் குறிப்பிட்ட இடத்திற்கு வருவதற்கு அரைமணி முன்பாகவே இந்தியப் பொலிசாரால் இவர்கள் கைது செய்யப்பட்டு 'ரைம் பம்' ஒன்றும்கைப்பற்றப்பட்டது.

மேற்படி சம்பவத்தை அடுத்து இதுபோன்ற சம்பவங்கள் ஜம்முகாஷ்மீர் பகுதிகளில் பாகிஸ்தானியர்களால் மேற்கொள்ளப்படலாம் என்கின்ற அச்சத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பாகிஸ்தானின் பயிற்சி பெற்ற தீவிரவாதிகளை இந்தியாவிவுக்குள் அனுப்பி வைக்கும் முயற்சி தோல்வியைத் தழுவிக் கொண்டதால்பாகிஸ்தானின் உளவுச் சேவையின் மூலமாக பல தீவிரவாதக் குழுக்களைச் சேர்ந்தவர்களை காஷ்மீருக்குள் பாகிஸ்தானிய அரசு அனுப்பி வைத்திருப்பதாகவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இப்படி அனுப்பப்படுகின்றவர்கள் எப்படியோ எம்மால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் ஏனைய சிலர் இந்திய எல்லைக்குள் ஊர்ந்து சென்று விட்டதாகவும், கடந்த இரண்டு மாத காலத்தில் எல்லையைத் தாண்டி இந்தியாவுக்குள் நுழைந்த 24 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இந்திய அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

பாகிஸ்தானின் எல்லையில் குறைந்தது 9000 காஷ்மீரத் தீவிரவாதிகள் முகாமிட்டுள்ளதாகவும், இவர்கள் சந்தர்ப்பம் பார்த்து இந்தியாவுக்குள் புகுவதற்காக எல்லையில் நிற்பதாகவும் ஜம்முகாஷ்மீர் கவர்னர் கிரிஷ் சந்திர சக்சேன தெரிவித்திருக்கிறார்.

இவ்வருட ஆரம்பத்தில் அவர்களை சரணடையுமாறு கோரிக்கை விடுத்ததில் 300 தீவிரவாதிகள் சரணடைந்ததாகவும் 193 பேர் எல்லையை கடக்க முயன்றபோது சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார்.

பாகிஸ்தானிய ஊடுருவல் அதிகரித்ததை அடுத்து ஆகஸ்ட் 2 இல் இருந்து இரண்டு மாதகால ஊரடங்கை அமுல் நடத்த ஜம்மு-காஷ்மீர் அரசு முடிவு செய்து ஊரடங்கும் அமுல்படுத்தப்படுகிறது.

மேலும் ஸ்ரீநகர் உட்பட 24 நகரங்களில் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடாத்துவதற்கு மாநில அரசு தடை விதித்துள்ளது. இத்தடையைதீவிரவாத அமைப்புக்கள் பலவும்வன்மையாக கண்டித்துள்ளன.

இதேவேளை எல்லைப் பகுதி இராணுவத்தினருக்கு உதவி அளிப்பதற்கென 19மேலதிக இராணுவ கொமாண்டோ படைப்பிரிவுகளும் மலைப்பகுதி யுத்தத்தில் பயிற்சி பெற்ற படைப்பிரிவுகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# வெளியுறவுச் செயலர்கள் மட்டத்தில் இந்திய-பாக். பேச்சுவார்த்தை

இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையிலான வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நாளையும் நாளை மறுதினமும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பேச்சுவார்த்தைகளின் போது இரு நாடுகளுக்கிடையிலான ராஜதந்திரிகளின் பராமரிப்பு அவர்களின் நடத்தை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் குறித்து இறுதி முடிவெடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய தூதரக அதிகாரி ராஜேஷ் மித்தல் பாகிஸ்தானிய உளவுப் பிரிவினரால் கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடைபெறவிருந்த ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இச்சம்பவத்தை அடுத்து ராஜதந்திரிகளின் நடவடிக்கைகள் தொடர்பான சில விதிமுறைகளை இரு நாடுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பாகிஸ்தான் முன்வைத்து யோசனை நடைபெறவுள்ள பேச்சுக்களின் போது முக்கியமான விடயமாக நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்படும் என பாகிஸ்தான்ய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அத்துடன் சியாசென் விவகாரம் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவது வரையிலான பிரச்சினைகளும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காஷ்மீர் விவகாரம் தொடர்பாகவும்அயோத்தியாவில் முஸ்லிம்கள் பாதிக்கப்படும் விவாகரம் தொடர்பாகவும் பாகிஸ்தான்தரப்பில் பிரஸ்தாபிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் காஷ்மீர் விவகாரம் உள்நாட்டு விடயம். இதில் பாகிஸ்தான் தலையிடக் கூடாது எனவும் அயோத்தியா விவகாரத்திலும் பாகிஸ்தான் தலையிடக் கூடாது எனவும் இதனை நாட்டுக்கு வெளியே எந்த மட்டத்திலும் பேசத் தயார் இல்லை எனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

# போஸ்னியா சண்டையை நிறுத்த 4 லட்சம் படைவீரர் தேவை

# அகதிகளுக்கு உணவில்லை; பிராணிகளுக்கு சத்துணவு

(லண்டன்)

உலகின் பல பகுதிகளில் நடைபெறும் அனர்த்தங்களால் இடம் பெயர்ந்து அகதி வாழ்க்கை வாழ்பவர்களுக்குப் போஷாக்கான உணவு கிடைப்பதில்லை. மேற்கு நாடுகளில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் நாய்களும், பூனைகளும் சத்துணவை உண்ணுகின்றன. இவ்வாறு பிரித்தானிய நாட்டு விஞ்ஞானிகள் இருவர் கூறுகின்றனர்.

அகதிகளுக்கு உதவியாக வழங்கப்படும் உணவுப்பங்கிட்டுப் பொருள்களில் போஷாக்குக்கிடையாது. ஆனால் வீடுகளில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் மிருகங்களின்உணவில் தேகத்தின் ஆரோக்கிய வளர்ச்சிக்குத் தேவையான உயிர்ச்சத்து, தாதுப்பொருள்கள் எல்லாம் நிறைவாக உள்ளன என்று லான்ஸ்லட் மருத்துவ சஞ்சிகைக்கு ஆய்வாளர்கள் எழுதியுள்ள கடிதமொன்றில் கவலை தெரிவித்துள்ளனர்.

அகதிகளுக்கு வழங்கப்படும் உணவின் வகை தொகையோடு செல்லப் பிராணிகளுக்கு வழங்கப்படும் உணவை ஒப்பிடும்போது, அந்தப் பிராணிகளின் உணவில் உயிர்ச்சத்து - ஏ, குழந்தைகளின் தேகவளர்ச்சிக்குத் தேவைப்படும் உயிர்ச்சத்து - பி வகையைச் சேர்ந்த *Riboflavin*, இரசாயனப்பொருள், இரும்புச்சத்து ஆகியன அதிகமாகக் காணப்படுகின்றன என்று தமது ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக இந்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்

அகதிகள் நாளொன்றுக்குச் சுமார் 400 கிராம் (14 அவுன்ஸ்) தானியங்கள், 30 கிராம் (1.058 அவுன்ஸ்)பருப்பு 20 கிராம் (0.755) உணவுக்கான எண்ணெய், சிறிதளவு சீனி ஆகிய உணவுவகைகள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. என்று குறிப்பிடுகிறார்கள்.

வீட்டுப் பிராணிகள் அல்லது செல்லப் பிராணிகளுக்குக் கொடுக்கப்படும் உணவுக்குச் சமமான போஷாக்கான உணவாவது அகதிகளுக்கு வழங்கப்படுதல் அவசியம் என்று குழந்தைகள் நலனுக்கான சர்வதேச நிலையத்தைச் சேர்ந்த அன்றூ ரொம்கின்சும், உணவு மற்றும் சத்துணவு மையத்தைச் சேர்ந்த சி ஜே கே. ஹென்றியும் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். இக் கடிதம் ஆகஸ்ட் 8 ஆம் திகதி லான்ஸ்லட் சஞ்சிகையில் வெளியாகியது.

# பொலிஸ் சுப்பிரிண்டன் வீரப்பனால் சுட்டுக்கொலை

(சென்னை)

மைசூர் மாவட்டப்பொலிஸ் சுப்பிரிண்டனும் ஹரிகிருஷ்னாவும் வேறு நான்கு பொலிஸ் அதிகாரிகளும் நேற்றுச் சந்தனக்கட்டை கடத்தல் காரன் வீரப்பன் கும்பல் மறைந்திருந்து தாக்கியதில் கொல்லப்பட்டனர். கிராமவாசி ஒருவரும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

நேற்று மாதேஸ்வர மலைப்பகுதியில் வீரப்பன் கும்பல் பொலிஸார் மீது குண்டுகளை வீசி, துப்பாக்கியால் சுட்டு ஐந்து பொலிஸ் அதிகாரிகளையும் ஸ்தலத்திலேயே கொன்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் இரண்டு லட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்று மாநில உள்துறை அமைச்சர் பங்களூரில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வீரப்பன் கும்பலைப் பிடிப்பதற்கு இராணுவத்தைப் பயன்படுத்துவது குறித்து மாநில அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அ. தி. மு. க. ஆட்சி அகற்றல்

# மூப்பனார் கருத்தை எதிர்த்து வாழப்பாடி கேள்வி?

[சென்னை]

ஜெயலலிதா ஆட்சியை அகற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிபாடுபடவேண்டும் என்று மூப்பனார்கூறியுள்ளார். அவர் காங்கிரசில்இருந்துகொண்டே அதை நிச்சயம் செய்ய முடி

ஆம் ஆண்டு வரை மூப்பனாரும், அவரது குழுவினரும் தமிழக காங்கிரஸ்கட்சியின்தலைவர்களாக மாறி மாறிப் பதவி வகித்தனர். அந்தப் பதினான்கு ஆண்டுக்

தம்மை எதுவும் செய்துவிட முடியாது என்ற நம்பிக்கை இராணுவத்தரப்பில் உள்ளதே காரணமாகும். ஆகையினால், எவரின் வற்புறுத்தலுக்கோ அன்றி கட்டளைகளுக்கோ இராணுவத்தினர் ஒருபோதும் சம்மதிக்கப்போவதில்லை என்பது இதன் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது.

இம் மயிலந்தனைப் படுகொலையில் அடுத்த முக்கிய அம்சம் இப்படுகொலை தொடர்பாக சிறிலங்காபொலிஸார் உடனடியாக விடுத்த அறிவிப்பு ஆகும். இத் தாக்குதல் பழிவாங்கும் நோக்கில், ஆயுதம் தாங்கிய முஸ்லிம் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் அறிவித்தனர். ஆனால், உண்மையில் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த சாரம் அணிந்த சிப்பாய்களே இப்படுகொலைகளைப் புரிந்ததாக நேரில் பார்த்தவர்கள் மட்டக்களப்பு] நீதிபதி முன் முறையிட்டுள்ளனர்.

அதாவது, தமிழர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை திட்டமிட்டு சிறிலங்கா இராணுவமும், பொலிசும் மேற்கொண்டன என்பதே உண்மையாகும். ஆனால் இதனை முஸ்லிம்கள் மீது திசை திருப்பிவிட அவர்கள் முயற்சித்தார்கள். இதன் மூலம் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் உள்ள முரண்பாட்டை மேலும் தீவிரமாக்க, சிறிலங்கா அரசு எண்ணியது.

ஆனால் இது சிங்கள அரசின் புதிய யுக்தியல்ல. கடந்த காலத்திலும் இதேபோன்றே சிறிலங்கா அரசாங்கம் நடந்துகொண்டது. அதில் வெற்றியும் கண்டது. ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகுறித்து தமிழர், முஸ்லிம்களை பலதடவை எச்சரித்தும் வந்தனர்.

ஆனால், அதனை முஸ்லிம்கள் கண்டுகொள்ளவும் இல்லை, ஏற்றுக் கொள்ளவுமில்லை. சிறிலங்கா அரசாங்கத்தின் கைப்பாவையாகவே செயற்பட்டனர். ஆனால், மயிலந்தனை சம்பவம் முஸ்லிம்களுக்கு ஒருபடிப்பினையாகும். சிறிலங்கா அரசாங்கமும்-ஆயுதப்படையினரும் முஸ்லிம்-தமிழ்மக்களை மோதவிட எவ்வளவு அக்கறையாகவுள்ளன என்பதை விளக்கப்போதுமானதாகும். அத்தோடு, இதுவரை காலமும் முஸ்லிம் குண்டர்களை ஏவி தமிழரைப்படுகொலை செய்த சிங்கள அரசாங்கம் தற்பொழுது நேரடியாகவே முஸ்லிம்களின் பெயரில் திட்டமிட்டு தானே படுகொலைகளைச் செய்யத் தொடங்கியது. இது, மிகவும் ஆபத்தான தொன்றாகும் இதனையும் முஸ்லிம்கள் கவனத்தில் கொள்ளாது விடில், எதிர்காலத்தில் சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் பெரும் அனர்த்தங்களுக்கு முஸ்லிம்கள் பொறுப்பு ஏற்கவேண்டிவரும்.

# பொஸ்னியா சண்டையை நிறுத்த 4 லட்சம் படைவீரர் தேவை

## -அமெரிக்க ஜெனரல் கணிப்பு

(வாஷிங்டன்)

முன்னாள் யூகோஸ்லாவியாவில் நிகழும் சண்டையை நிறுத்துவதற்கு சுமார் 4,00,000 ஐ. நா. துருப்புகள் ஒரு வருட காலத்திற்கு தேவைப்படுவர் எனவும் ஆனால் இத் துருப்புக்கள் வாபஸ் பெற்றபின்பும் அங்கு சுமுகநிலை ஏற்படுவதற்கான உத்தரவாதம் எதுவும் இல்லை என்றும் அமெரிக்க ஜெனரல் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குரோஷியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக சேர்பியப் படைகள் போராடி வருகின்றனர். இவ் முத்தரப்பினருக்கும் இடையில் இருக்கும் பரஸ்பரம் வெறுப்பை அழிக்கவே நாம் முயற்சி செய்து வருகிறோம் என அமெரிக்க ஜெனரல் பெரி. மெக்காப்ரே தெரிவித்தார்.

''யூகோவில் இடம்பெறும் படுகொலைப் பிரதேசம் வியட்நாமை விட சற்றுப் பெரிதாகவும், வடஅயர்லாந்தை விட நான்கு மடங்கு பெரிதாக உள்ளது. 2,00,000 ஆயுதபாணிகள் பொஸ்னியா ஹெர்சகோவினாவில் உள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அடர்ந்த காடுகள் இருப்பதால் அமெரிக்க சமாதானப்படை கெரில்லா யுத்தத்தை எதிர்நோக்க வேண்டி வரும் என செனட் இராணுவக்கமிட்டியில் வாக்குமூலமளித்த உதவி பாதுகாப்பு அமைச்சர் ஸ்டீபன் ஹெட்லி தெரிவித்தார்.

நிவாரணப்பொருள்கள்செல்வதற்கு உதவும் வகையில் பல த்காரத்தை உபயோகிக்கும் ஐ நா. தீர்மானத்தை அமெரிக்காவும் ரஷ்யாவும் ஆதரித்துள்ளன.

இதே சமயம் 40க்கு மேலான சிறை முகாம்கள் பற்றி ஆராய பொஸ்னியா ஹெர்சகோவினாவுக்கு 5 அங்கத்தவர்களை கொண்ட குழு ஒன்றை சர்வதேச மீட்புக்கமிட்டி அனுப்பியுள்ளது

# 'தமிழரின் நிலை' பற்றி ஆய்வு நூல் வெளியிரு

'தமிழரின் நிலை' என்ற தலைப்பிலான நூல் ஒன்றினை வெளியிட நியூயோர்க் தமிழ்ச் சங்கம் திட்டமிட்டுள்ளது. உலகம் முழுவதும் இருக்கின்றதமிழ்ஆய்வாளர்களிடம் இருந்து இந்நாலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்களையே இயன்றவரை மையமாகக் கொண்டு ஆய்வு நோக்குடன் சுமார் பத்துபக்க அளவில் கட்டுரைகள் எழுதப்பட வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

ஆயிரம் பிரதிகள் மட்டும் அச்சிடப்படவுள்ள இந் நூல் உலகம் முழுவதும் விநியோகிக்கப்பட இருப்பதுடன் 200 பிரதிகள் தமிழ் நாட்டு கல்வி நிறுவனங்களுக்கு அன்பளிப்பு செய்யப்படவுள்ளது. கட்டுரைகளை அனுப்ப விரும்புவோர் ஆர். கபாலீஸ்வரன் 1379, தோமஸ் அவனியூ, நியூஜெர்ஸி, 08902 ஐக்கிய அமெரிக்கா என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

# 4 ஆவது ஜம்போறியத்திற்கு யாழ். குழு செல்லாது

நான்காவது தேசிய ஜம்போறி விழாவிற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து யாழ். மாவட்ட திரிசாரணர் குழு செல்லாது என தெரிவிக்கப்படுகிறது.

சாரணர் சங்க கூட்டத்திலேயே இது குறித்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமையும் தென்பகுதியில் பதற்றம் காரணமாகவும் இக்குழு செல்லாது என மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

### உற்சவம்

கந்தர்மடம் ஆத்தி சூடி வீதி ஸ்ரீசித்திவினாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக உற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ச்சியாக பதினைந்து தினங்கள் அபிஷேகம் நடைபெறும். இந்த அபிஷேக உற்சவத்தை ஒட்டி அடுத்தமாதம் முதலாம் திகதி காலை சகஸ்ர சங்காபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும். மாலையில் வினாயகப்பெருமான் வீதி வலம் வருவார்.

### எறிகணை வீச்சு

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் காலை 10.45 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் ஏழாலை கிழக்குப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடத்தினர்.

இவ் எறிகணைகளில் ஒன்று விழுந்து வெடித்ததில் ஒரு பெண் காயமடைந்தார். மேலும் தெல்லிப்பழைப் பகுதியில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் வேறொருவர் காய முற்றார்.

ஜெயலலிதா ஆட்சியை அகற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிபாடுபடவேண்டும் என்று மூப்பனார்கூறியுள்ளார். அவர் காங்கிரசில்இருந்துகொண்டே அதை நிச்சயம் செய்ய முடியாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவிக்கிறார்.

அவர் மேலும் கூறுகையில்; கடந்த 1976 முதல் 1990 ஆம் ஆண்டு வரை மூப்பனாரும், அவரது குழுவினரும் தமிழக காங்கிரஸ்கட்சியின்தலைவர்களாக மாறி மாறிப் பதவி வகித்தனர். அந்தப் பதினான்கு ஆண்டுக் காலப்பகுதியில் தமிழ்கக் காங்கிரஸ் காரர்களின் தன்மானத்தை இழக்க வைத்தவர்கள், இன்று இவ்வாறு பேசுவது சரியா என்று வாழப்பாடி ராமமூர்த்தி வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

### அணுவாயுத வசதிகளை

# அமெரிக்கா பார்வையிட பாகிஸ்தான் மறுப்பு

பாகிஸ்தான் தனது அணுவாயுத வசதிகளை அமெரிக்கா பார்வையிட அனுமதி வழங்க மறுத்துள்ளது.

இஸ்லாமாபாத்திலிருந்து சுமார் முப்பது கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கபுத்தாவின் அணுவாயுத வசதிகளையும், அணு உற்பத்தித் திட்டத்தையும் பார்வை கொள்வதான அமெரிக்க யோசனையை பாகிஸ்தான் நிராகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

### கலவரத்தைத் தூண்டும்

# துண்டுப்பிரசுரங்களுக்கு புதிய கட்சியே காரணமாம்

(கொழும்பு)

அண்மையில் உருவாக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால்அமைக்கப்பட்ட மாணவர் குழுவினாலேயே கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து கலவரத்தைத் தூண்டும் துண்டுப் பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர் இந்த மாணவர் குழுவுக்குள் ஜே வி பியுடன் தொடர்புள்ள நபர்களும் புகுந்து அதிகாரத்தைக் கைப்பற்றியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பிரசுரங்கள்வெளியிட்டவர்களின் பின்னணியில்செயற்பட்டவர்கள் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளிலிருந்தே மேற்படி விடயங்கள் தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன் ஜே வி.பியினர் நடத்திய தந்திரோபாயங்கள் இதற்கும் பொருத்தமானதாக அமைந்ததாகச் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தமக்கு இராணுவத்தினரது ஆதரவிருப்பதாகக் காட்டி மாணவர்களையும் மக்களையும் பயமுறுத்தி அதன்மூலம் அவர்களை கீழ் பணியவைப்பதே இவர்களது நோக்கமாக இருப்பதாகவும், அவர்களுடைய உபாயமாகவிருப்பது அரசாங்கக் கட்சி உட்பட அடிக்கடி உருவாகும் எல்லாப் பிரச்சினைகளின் போதும் பேதங்களினை உருவாக்குவதுமாகும்.

மேலும் எதிர்க் கட்சிகள் செய்யும் பிரசாரத்திற்குச் சமமாகவே இந்தப் பிரசுரத்தில் கறுப்புப்பூனைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவமக்கள் இயக்கம் என இத்துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்ட பெயரைக்கொண்ட அமைப்பு ஒன்று இராணுவத்தில்இல்லை எனவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

# ஈழநாதம்

# சர்ச்சைக்குரியவற்றை 3 ஆண்டுகள் ஒத்திப்போடுக

- நரசிம்மராவ்

(டில்லி)

வளர்ச்சிப் பணிகளில் நாடு செலுத்தும் கவனம் சிதறாமல் இருப்பதற்காக சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை மூன்றாண்டுகளுக்கு ஒத்திப்போடுமாறு பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கேட்டுக்கொண்டார்.

புதுடில்லி செங்கோட்டையில் மூவர்ணக்கொடியை ஏற்றிவைத்த நரசிம்மராவ் அங்கு உரை நிகழ்த்துகையில் மேலும் மக்களை ஒன்றுபடுத்தக்கூடிய பிரச்சினைகளுக்குத்தான் முக்கியத்துவம்தரவேண்டுமேயன்றி மக்களைப் பிரிக்கும் பிரச்சினைகளுக்கு அல்ல

அத்துடன் தமது அரசு அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்கமாட்டாது என்றும், கலந்துபேசிய பிறகுதான்எந்த முடிவையும் எடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அயோத்தியா பற்றிக் குறிப்பிடுகையில், அயோத்தியாவில் இராமர் ஆலயம் கட்டப்பட வேண்டுமென அரசு விரும்புகின்றது. ஆனால் மசூதி இடிக்கப் படக் கூடாது என்பதே அரசின் நிலை என்றார்.

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியே என்பதை வலியுறுத்திய பிரதமர் இந்தியாவிலிருந்து காஷ்மீரைத் துண்டாட எந்தச் சக்தியும் அனுமதிக்கப் படமாட்டாது என்றும் குறிப்பிட்டார்.

## திறமையற்ற அதிகாரிகள்மீது கடும் நடவடிக்கை

- சதாம்ஹுசைன்

(பாக்தாத்)

கொள்ளை இலாபம் அடிக்கும் வர்த்தகர்கள் மீதும் திறமையற்ற அதிகாரிகள் மீதும் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் யுத்தப்பிரகடனம் செய்துள்ளார்.

திறமையின்றிச் செயல்படும் அரசாங்க அதிகாரிகள் பொருளாதார நாச வேலைக்காரர்களாகக் கருதப்படுவார்கள். கொள்ளை இலாபம், ஏகபோகம் ஆகியவற்றில் ஈடுபட்ட தேசத் துரோகிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் போன்றே திறமையற்ற அதிகாரிகளுக்கு எதிராகவும் எடுக்கப்படும் என அந்நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்

கடந்த மாதம் 42 வர்த்தகர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதனை அடுத்து சில வர்த்தகர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். ஐ நா. தடையையும் மீறி உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களுக்கு இதனால் அச்சமேற்பட்டுள்ளது,

இதே வேளை 550 வர்த்தகர்கள் சுற்றி வளைக்கப்பட்டு சிறைக்கு கொண்டு செல்லப் பட்டதாகவும் மற்றும் பலர் தங்கள் வர்த்தக ஸ்தாபனங்களுக்கு முன்கட்டப்பட்டுஅவர்கள் மீது உணவுப் பொருள்கள் வீசப்பட்டதாகவும் ராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

## கோல் காப்பாளரால் காப்பாற்றப்பட்ட குழந்தை

(லண்டன்)

மாடிக் கட்டடமொன்றில் சுமார் 36 அடி உயரத்தில் இருந்த ஜன்னலொன்றில் இருந்து கீழே விழுந்த இரண்டு வயதுக் குழந்தை ஒன்றை உதை பந்தாட்ட கோல்காப்பாளர் ஒருவர் காப்பாற்றினார்.

இங்கிலாந்து ஸ்டீவனேஜ் என்ற இடத்தில் மேற்படி சம்பவம் நிகழ்ந்தது. 28 வயதுடைய போல் எட்மன்ஸ் என்ற இந்தகோல் காப்பாளர் உதைபந்தாட்டம் ஒன்று முடிந்து வரும் போது குழந்தை விழுவதைக் கண்டு அதனைப் பிடித்து காப்பாற்றியுள்ளார்.

## ஈராக் அரசுடன் ஐ. நா. குழு பேச்சுவார்த்தை

(பக்தாத்)

ஈராக்கில் ஐ.நா. படைகள் நிலை கொண்டிருப்பதற்கான உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்வதற்காக ஐ. நா படையின் தூதுக்குழு நாளை ஈராக்குடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளது.

ஈராக்கில் தங்கி நின்று பணியாற்ற ஐ. நா. வின் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதி கடந்த யூன் மாதத்துடன் முடிவடைந்துவிட்டது

தொடர்ந்து நிலைகொள்வதற்கான உடன்படிக்கையை

## தொண்டர் ஆசிரியர் பயிலுனராக நியமனம்

(கொழும்பு)

பல காலமாகத் தொண்டர் ஆசிரியராக சேவையாற்றி வந்த 1600 ஆசிரியர்கள் வடக்கு,கிழக்கு மாகாண சபையினால் பயிலுனர்ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 1556 பேர் தமிழ் மொழிமூல ஆசிரியர்கள் என்பதும் ஏனையோர் சிங்கள மொழிமூல ஆசிரியர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது

## 37-வது ஆண்டு விழா

(பருத்தித்துறை)

தென்புலோலி அறிவகம் சனசமூகநிலையத்தின் 37-வது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்புவிழாவும் முருகையா கோயிலடி விளையாட்டு மைதானத்தில் நிலையத்தலை

## கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் சுற்றாடலில் அமைக்கப்பட்டுள்ள சகல உணவகங்கள் தேநீர்ச்சாலைகள் ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பான விற்பனை ஸ்தாபனங்கள், மிட்டாய் விற்பனை நிலையங்கள் ஆகியனவற்றின் சகல உரிமையாளர்களுக்குமான ஓர் கருத்தரங்கு இன்று காலை 11 மணிக்கு நல்லூர் பேற்கு வீதியில் அமைந்துள்ள மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் அனைத்து நிறுவனங்களின் உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளும்வண்ணம் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

## பாடசாலைகளுக்கிடையே உதைபந்தாட்டப் போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான 17, 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை மிகவும் சிறப்பாக நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ்விடயம் சம்பந்தமான கூட்டத்தில் இதற்கென ஒரு விசேட ஒழுங்குக் குழுவும நியமிக்கப்பட்டது.

போட்டிகளை லீக் முறையில் நடத்துவதெனவும், ஒவ்வொரு கோட்டத்தினிடமிருந்து முதல் நான்கு இடங்களை பெறும் அணிகள் மாவட்டப் போட்டியில் பங்கு பற்றும்.

கோட்டத்திற்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளிலிருந்து செப்டம்பர் 5ஆம் திகதிக்கு முன்பதாக அக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளருக்குக் கிடைத்தல்வேண்டும். கோட்டப் போட்டிகள் செப்டம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகும். இப்போட்டிகளின் ஒழுங்குகளை இதற்கென நியமிக்கப்பட்ட விசேட குழு மேற்கொண்டுள்ளது என யாழ். மாவட்ட உடற் கல்வி உதவிக் கல்விக் பணிப்பாளர் திரு. த அருணகிரிராஜா தெரிவித்துள்ளார்.

## கல்விச் சேவைக் குழு கல்விச்சேவைச்சபையானது

(கொழும்பு)

பொதுச் சேவை ஆணைக் குழுவில் கல்விச்சேவை ஆணைக்குழுவாக இயங்கிவந்த குழு தற்போது பொதுச் சேவை ஆணைக்குழுவில் கல்விச் சேவைச் சபையாக மாற்றப் பட்டுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாகவே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது இந்த மாற்றம் மூலம் கல்விச் சேவைச் சபைக்குக் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கல்விச்சேவைச் சபையின் செயலாளர் ஏ. எஸ். வீரரட்ணா தெரிவித்தார்

### பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தின் இரண்டாம் ஆண்டுப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளிவந்துள்ளது இப்பரீட்சையில் முதலாம் வகுப்பில் ஒரு மாணவியும், இருபது பேர் இராண்டாம்வகுப்பிலும் மற்றும்பத்தொன்பது பேர் சித்தியெய்தியும் உள்ளனர்.

## சுன்னாகம் பகுதியில் மாவீரர் வீதி திறப்பு

(சுன்னாகம்)

சுன்னாகம் பகுதியில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக நேற்று இரவு வீதி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த வீதியினை திரு போகரத்தினம் யோகி அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப்

இதனையடுத்து பொன். கணேசமூர்த்தியின் நெறியாள்கையில் இரட்டை முகங்கள் என்ற நாடகமும் வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வினை சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர். (11), (09)

## 2ஆண்டுகளுக்கு முன் கைதானவரை விடுவிக்கக் கோரி மனு தாக்கல்

இரண்டு ஆண்டுகளுக்குமுன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு இன்றுவரை தகவல் ஏதும் தெரியாத நிலையில் உள்ள தனது கணவரை நீதிமன்றின் முன் ஆஜர் செய்து விடுவிக்குமாறு மனைவியான தேவமாதா என்பவர் ஆட்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

சோமநாதன் சிவனேசராசா ஆகிய குறிப்பிட்ட நபர் 1990 ஆம் ஆண்டு 7ஆம் மாதம் 17ஆம் திகதியன்று பெரிய போரதீவு காளியம்மன்கோவில் அகதி முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும்,

இவருடன் சேர்த்து மொத்தம் 36 பேர் கைது செய்யப்பட்டு பின் அவர்களில் ஏழு பேரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது கணவரைப் பற்றி இராணுவத்திடம் விசாரித்த போது அவரை வட்டுவான் இராணுமுகாமிற்கு அனுப்பி விட்டதாக இராணுவததினர் கூறிய போதும் இன்றுவரை தனது கணவரைப் பற்றிய தகவல் ஏதும் கிடைக்கவில்லை எனவும் மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## பெண் சாரணியம் 75 ஆண்டு பூர்த்தி விழா

(பருத்தித்துறை)

இலங்கையில் பெண் சாரணியம் ஆரம்பிக்கப்பட்ட 75 ஆவது வருட பூர்த்திவிழாவையொட்டி பருத்தித்துறையில் உள்ள நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 100 பெண்சாரணியர்கள் ஆலயங்கள், பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை என்பனவற்றில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி, பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை தும்பளை சைவப் பிரகாச மகாவித்தியாலயம், பருத்தித்துறை சென்தோமஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளையும் சேர்ந்த பெண்சாரணியர்களே பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை, கற்கோவளம் மெதடிஸ்த தேவாலயம், வதிரி ஸ்ரீபரமானந்தா அனாதைகள் ஆச்சிரமம் ஆகியவற்றில் சுற்றாடல் சுத்தம் செய்தல், மண்டபங்கள் கழுவுதல் போன்ற சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் இச்சிரமதான வேலைகளின் சாரணிய வழிகாட்டுநர்களாக செல்வி திருநாவுக்கரசு வட-இந்துமகளிர் கல்லூரி ஆசிரியை, திருமதி அ. தவராசா மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி ஆசிரியை, செல்வி மே இராமசாமி தும்பளை சைவ பிரகாச மகாவித்தியாலய ஆசிரியை செல்வி தி சோமசுந்தரம், செல்வி மீ கணேசன் ஆகியோர் செயற்பட்டனர். (25)

### அத்துலத்முதலி ஐரோப்பா பயணம்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான லலித் அத்துலத்முதலி தமது பாரியார் மற்றும் மகள் ஆகியோருடன் ஐரோப்பாவுக்கு பயணமாகியுள்ளார். இவரது பயணத்திற்கான நோக்கம் மற்றும் அவர் எங்கெங்கு செல்லத் திட்டமிட்டுள்ளார். என்பன போன்ற விபரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை.

### 500 அகதிகள் நாளைநாடுதிரும்புவர்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளில்

### கலந்துரையாடல்

(வேலணை)

தீவக மாவீரர் செயற்குழு உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நாளை காலை 9மணிக்கு நல்லூரில் உள்ள மாவீரர் செயலகத்தில் நடைபெறவிருக்கின்றது. இக்கலந்துரையாடல் நிகழ்ச்சியில் தமிழ் ஈழ மாவீரர் பணிமனைபொறுப்பாளர் திரு. தியாகம், தீவக அரசியல் பொறுப்பாளர் திரு சேரலாதன் யாழ் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு.சிவா உட்பட பலர் அன்றைய தினம் கலந்து கொள்ளவுள்ளனர். (14)

### அவசர

தற்கு அரசியல் காரணம் கற்பிக்கப்படுகிறது. ஆனால் மறுதினம் நடந்த மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணாவின் மரணச்சடங்கிற்குப் பாதுகாப்பு இரட்டிப்பாக

ஈராக்குடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளது.

### வதந்தியை

தகவலைக்கேட்ட மனைவி இராசலட்சுமி (வயது 19) என்பவர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார். ஆனால் உண்மையில் இவரது கணவன் கையில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகிறார். (க,14)

தொடர்ந்து நிலைகொள்வதற்கான உடன்படிக்கையை புதுப்பிக்க ஈராக் விரும்பவில்லை. ஐ நா. படையினர் இனிமேலும் தங்க அவசியம் இல்லை என ஈராக்கிய அரசு கூறிவருகின்றது.

இதனையடுத்து இறுதிமுடிவொன்றை எடுக்கவே நாளை ஈராக்குடன் பேச்சு நடத்த ஐ நா. முடிவு செய்துள்ளது.


## போராளிகள் நினைவு மலர்

போராளிகளின் நினைவு மலர்கள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோர், வைத்திருப்போர் எமக்கு ஆவணத்திற்கு இரு பிரதிகளை அனுப்பியுதவவும்.

மாவீரர் படிப்பகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

(4896)


கோயிலடி விளையாட்டு மைதானத்தில் நிலையத்தலைவர் திரு. செ தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிலே பருத்தித்துறை பிரதேசச் செயலாளர் திரு ச. முருகேசபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார் விழாவிலே பருத்தித்துறைஹாட்லிக் கல்லூரி ஆசிரியர்பண்டிதர் பரந்தாமன் இலங்கை வங்கி நெல்லியடி முகாமையாளர் திரு சி. நடராஜலிங்கம், கிராமசேவை அலுவலர் திரு. ச. சிவசண்முகம், திரு வ. சேதுநாயகம் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். திரு முருகேசபிள்ளை வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களை வழங்கினார். (25)

### எறிகணைவீச்சு

அனுப்பி வைக்கப்பட்டது.

இத் தாக்குதலில் தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்திருந்த மக்களே பாதிப்புக்குள்ளாகினர். இருவர் கொல்லப்பட்டதும் ஆறுபேர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (க) (பா)

### எறிகணை

நடத்தப்பட்ட இத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதம்பற்றி தெரியவில்லை. (பா)

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

மாவீரர்களின் உருவப்படங்களை மாவீரர்களின் பெற்றோர் திரைநீக்கம் செய்துவைத்தனர். விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் திரு. யோகி, திரு பரா, திரு. வாஞ்சிநாதன், திரு இளம்பரிதி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

### எழுதுவினைஞர்

டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே என் மூலம் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 21 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை எனக்கு அனுப்பி வைக்கவும்.

இத்தினத்திற்கு பின்னர் விண்ணப்பிப்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களை நேரடியாக பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (பா) (க)

தினர் ஒழுங்கு செய்திருந்தனர். (11), (09)

### உலர் உணவு அட்டை

(யாழ்ப்பாணம்)

இதுவரை உலர் உணவு அட்டைகளைப் பெற்ற தீவக மக்கள் தங்களுடைய ஆவணி மாதத்திற்கான உலர் உணவைப் பெறுவதற்கு தங்களுடைய நிரந்தர (தீவகத்தில்) கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்கவும் பட்டியல் தயாரித்துசம்பந்தப்பட்டபலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

இதுவரை புதிய உலர்உணவு அட்டையைப் பெறாதவர்கள் தங்களுக்குரிய குடும்பப்பதிவு அட்டையுடன் வேலணை, ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளில் ஐந்நூறுபேர் நாளை திங்களன்று இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து கப்பல் மூலம் இவர்கள் அனுப்பி வைக்கப்படுவர் என்றும் மூன்றுமாதகால இடைவேளைக்குப் பின்னர்இக்கப்பல்சேவை ஆரம்பிக்கிறது என்றும்இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

### எதிர்க்கட்சிகளின்

கொப்பேகடுவவுக்கு எதிராக 1982 ஆம் ஆண்டு தேர்தலின் போது இயக்கம் நடத்தியவர்கள் அவரது அண்ணன் மகனான டென்சில் கொப்பேகடுவவிற்குப் பரிவு காட்டுவது வியப்பைத் தருவதாகஉள்ளது என்று கூறினார்.

ரல் விஜய விமலரட்ணாவின் மரணச்சடங்கிற்குப் பாதுகாப்பு இரட்டிப்பாக இருந்தபோதும், அன்று முதல் நாள் நடந்ததைவிடக் குழப்பம் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் தீவிரமாகக் காணப்பட்டன. இச்சம்பவங்கள் அரசியல் லாபம் கருதித் தூண்டப்பட்டவையன்று இது மக்களின் அரசுக்கெதிரான கிளர்ச்சியே ஆகும் என்று ராவய ஆசிரியர் ஐவனை மேற்கோள் காட்டி பி. பி. சி அறிவித்தது

### பட்டதாரிகள்

''சுப்ரா'' தரத்திற்கான புதிய சம்பள விகிதம் ஏனைய சம வேலைகட்கும் வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாய் தெரியவருகிறது.


## ஓ... இந்த இடத்தில் மீண்டும் சந்திக்கின்றோம்

நேற்றைய தினம்
தாகத்தைப் பூர்த்தி செய்யும்
ஒரு பொருள் பற்றி ஓர் அறிவித்தல் வந்தது

**ஒன்றும்**
**விளங்கவில்லையா?**

நாளைவரை பொறுத்திருங்கள்

விளம்பர அமைப்பு
செனித் ஜோ. எக்...

(3020)



## 2ஆம் ஆண்டு ஞாபகார்த்த திருப்பலி பூசை

**யோசேப் வசந்தி,**
**யோசேப் மேரி மதிவதனி**

யோசேப் வசந்தி, யோசேப் மேரி மதிவதனி ஆகியோரின் நினைவாக 17 - 08 - 92 திங்கட்கிழமை [நாளை] காலை 7மணிக்கு முகமாலை மாதா கோவிலில் இரங்கற் பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிளாலி வீதி,
எழுதுமட்டுவாழ். (3030)

தகவல்:
இ.யோசேப்பு



வாசகப் பிரியர்களே!
இலக்கிய ஆர்வலரே!
நூலகப் பேராளரே!
பள்ளிச் சிறுவரே!
உயர்கல்வி மாணவரே!

## உங்கள் தேவைதான் என்ன?

போராட்ட நூல்களா?
நாவல் இலக்கியமா?
நவீன கவிதைகளா?
பாட நூல்களா?
இலக்கிய ஆராய்ச்சியா?

சகலவிதமான பாடசாலை நூல்கள்
பாடசாலை உபகரணங்கள் - அனைத்தும்
நிறைந்த மனதோடு குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
வாருங்கள்!

**''தமிழ்த்தாய் புத்தகசாலை''**

இல 191, மின்சாரநிலைய வீதி,
பஸ்நிலைய முன்பாக,
யாழ்ப்பாணம்.

[சி-4898]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.